8. அறிவிப்புகள்--(தொடர்ச்சி)

(ஊ) காமன்வெல்த் பாராளுமன்ற (தமிழ்நாடு பிரிவு) சங்கப் பொதுக்குழு கூடுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாலை 5 மணிக்கு நடைபெறுவதாக இருந்த காமன் வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் உறுப்பினர்களுடைய பொதுக் குழுக் கூட்டம் முன்னாள் மேலவை மண்டபத்தில், பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (6-5-1995) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

123. 1979-ஆம் ஆண்டு பொருட்கள் (மதுபான சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட) விற்பனை, ஒருவகை செய்தல் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 25-10-1994 ஆம் நாளிட்ட 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.).

124. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை (1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்.)

125. 1992-93-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)